**திருகோணமலை நகர சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திருகோணமலை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திருகோணமலை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) நகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளான 1.2(அ) (i), (ii) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் தொங்கல் கணக்கில் ரூபா 1,114,489 தொகையான வரவு மீதியொன்று ஏற்பட்டிருந்தது. | தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் தரவுகள் தொடர்ந்து ஆராயப்பட்டு வருவதனால் அவை கிடைக்கும் தருணத்தில் முழுமையாக சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதென. | தொங்கல் கணக்கினை சீர்செய்ய வேண்டும். |
| ஆ) | வாடி வீடுகளுக்கான நிலுவை குத்தகை தொகையிலிருந்து ரூபா 367,770 தொகை மீளாய்வாண்டில் பெறப்பட்ட போது அத் தொகையினை மீளாய்வாண்டிற்கான வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் வருமானக் கணக்கு மற்றும் வருமான நிலுவை கணக்கு என்பவற்றை தனியான பேரேடுகளில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென. | குறித்த தொகை குத்தகை நிலுவை தொகையிலிருந்து கழித்துக் காட்டப்படல் வேண்டும். |
| இ) | 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரைக்குமான 04 ஆண்டுகளுக்கான கூட்டுமொத்தம் ரூபா 2,770,831 தொகையான செலுத்தாத கணக்காய்வு கட்டணத்திற்கு மற்றம் மீளாய்வாண்டில் கணக்காய்வு கட்டணத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிகழாண்டிற்கான இறுதிக் கணக்குகளில் குறித்த விடயம் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென. | ஒவ்வொரு நிதி ஆண்டிற்குமான கணக்காய்வு கட்டணம் நாளாதுவரையாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ஈ) | 2021 ஆம் ஆண்டிற்காக மீளாய்வாண்டில் பெறப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 288,660 வானது மீளாய்வாண்டின் வருமானமாக காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| உ) | 2022 திசெம்பர் மாதத்திற்காக கிடைக்கப்பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 5,969,230 தொகையானது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நீதி மன்றத்தண்டப் பணத்திற்கான பட்டியல்படுத்தப்பட்ட தொகையை கணிப்பிடுவது நடைமுறை சிக்கலான விடயம் என்பதனால் எதிர்வரும் காலங்களில் மதிப்பிடப் பட்ட தொகையினை பட்டியல் படுத்தப்பட்ட தொகையாக கணக்குளில் வெளிப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| ஊ) | மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 145,669 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | நிலையான வைப்பின் புதுப்பித்தல் தொடர்பான அறிவித்தலின் படி உரிய காலப்பகுதிக்கான வட்டி தொகையினை கணிப்பிட்டு கணக்குகளில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன். குறித்த விடயம் நிகழாண்டில் சீர்செய்யப்படும். | -மேற்படி- |
| எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்துக்காக கிடைக்க வேண்டிய சம்பளம் மற்றும் சபை உறுப்பினர்களின் கொடுப்பனவுகள் ரூபா 10,784,193 கிடைக்கப்பெற வேண்டிய வருமானங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிகழாண்டு நிதிக்கூற்றுக்களில் சீர்செய்யவதெென. | வருமதியாக காட்டப்பட வேண்டும் |
| ஏ) | மீளாய்வாண்டில் செலுத்தப்பட வேண்டிய செலவுகள், செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் வீதவரி பணத்திற்காக வழங்கப்பட்ட கழிவு போன்ற செலவீனங்களின் கூட்டுமொத்தம் ரூபா 5,979,498 தொகையானது ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கில் வரவு வைப்பதற்கு பதிலாக திரண்ட நிதியத்துக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. | குறித்த தொகைகள் வருமானச் செலவுக்கணக்கில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. மேலும் மீளாய்வாண்டிற்கான வருமான மிகையினை திரண்ட நிதிக் கணக்கில் பதிவதற்கு பதிலாக வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தனித்தனியாக பதியப்பட்டுள்ளது. எனினும் தங்களின் அறிவுறுத்தலிற்கு இணங்க திரண்ட நிதிக் கணக்கினை நிகழாண்டில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென. | செலுத்தப்பட வேண்டிய செலவுகள் ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன் நடைமுறை பொறுப்பிலும் காட்டப்படவேண்டும். |
| ஐ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 17,952,501 பெறுமதியான நிலையான சொத்துகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | நிகழாண்டிற்கான நிதிக் கூற்றுகளின் தயாரிப்பின் போது குறித்த விடயம் சீர்செய்யப்படுமென. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்து மூலச் சான்றுகள் இல்லாமை**

| விடயம் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ரூபா 6,051,507 பெறுமதியான 02 கணக்கு மீதிகள் உரிய ஆவணங்கள், பதிவேடு மற்றும் பேரேட்டு கணக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததால் திருப்திகரமாக பரீட்சிக்கமுடியவில்லை. | தகவல்களை கோரியுள்ளதென மற்றும் தகவலகள் கிடைத்தவுடன் சரி செய்வதென. | கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| விடயம் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான 03 பேரேட்டு கணக்குகளின் மீதிகள் மற்றும் அவற்றிற்கான பட்டியல்களுக்குமிடையே ரூபா 3,701,147 தொகை வேறுபாடு காணப்பட்டது. | விலகலுக்கான காரணத்தை கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படுவதென. | மீதிகளை இணக்கம் செய்து சரி செய்ய வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| நி.பி 371 | 5 ஆண்டு முதல் 20 வருடங்களுக்கு மேலாக நிதிக்கூற்றில் காணப்படும் காலங்கடந்த வைப்புக்கள் ரூபா | தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட வைப்பு தொகையுடன் தொடர்புடைய வைப்பு பதிவேடுகள் 2013 ஆம் தொடக்கம் இதுவரை இற்றைப்படுத்தப்பட்டுள்ளதுட | நிதிப்பிரமாணக் கோவை பிரகாரம், உரிய நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | 92,249,690 தொடர்பில் உரிய நடவடிக்கை ஏதுமின்றி வைப்புக்கள் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப் பட்டுள்ளது. | ன் அவற்றில் சான்றாதாரங்கள் உள்ள மற்றும் சாத்தியமான வைப்புத்தொகைகளை மீளாய்வாண்டில் வருமான கணக்கிற்கு மாற்றியதுடன் நிகழாண்டில் வருமானக்கணக்கிற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | வேண்டும |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | | | |
| (i) XIX ஆம் அத்தியாயம் பிரிவு 4.2, 4.4, 6.1, 6.3, 7, 7.2, 8, 9 | நகர சபையினால் உத்தியோகபூர்வ இல்லங்கள் வாடகைக்கு வழங்கப்படுகின்ற போதிலும் உத்தியோகத்தரின் வாடகைக்கான விடுதித் தகைமையினை தெரிவு செய்யும் போது தேர்ந்தெடுத்தல் வழிகாட்டி ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தபான விதிக்கோவையின் அத்தியாயம் XIX இன் 4.2 பிரிவிற்கு அமைவாக வழிகாட்டி ஒன்றினை வெகுவிரைவில் தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது. | தபான விதிக்கோவையின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 96,899,734 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 2,374,395 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிட ப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2021 மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிட ப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாற ான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரியும் வரியும் | 42,355 | 40,376 | 41,992 | 100,061 | 42,440 | 38,847 | 35,245 | 101,596 |
| வாடகை | 36,570 | 28,925 | 20,727 | 45,623 | 37,774 | 27,865 | 25,536 | 38,161 |
| உத்தரவுப்பத்திரக்கட்டணம் | 12,668 | 19,124 | 19,124 | -- | 13,399 | 13,660 | 13,660 | -- |
| ஏனையவை | 14,330 | 11,038 | 6,038 | 33,212 | 16,469 | 8,912 | 8,912 | 3,711 |
| | **105,923** | **99,463** | **87,881** | **178,896** | **110,082** | **89,284** | **83,353** | **143,468** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **அ) வீதவரி மற்றும் வரி** | | |
| i) நகரசபையின் அதிகார எல்லைக்குள் அசைவற்ற ஆதனங்கள் மீது ஆதன வரிகள் அறவீடு செய்வதற்காக சபையினால் 3,649 ஆதன உரிமையாளர்களுக்கு வரி நிலுவைத் தொகை K படிவம் மூலம் தெரியப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | படிவங்களை விநியோகிப்பதில் பாரிய அசௌகரியத்தினை சபை எதிர்நோக்கி உள்ளது. | ஆதன வரி நிலுவை தொடர்பில் ஆதன உரிமையாளர்களுக்கு "K" படிவம் வழங்கப்பட வேண்டும். |
| ii) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ஆண்டிற்குரிய ரூபா 16,303,605 மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாக விதவரி ரூபா 101,596,687 அறவிட வேண்டியதாக இருந்தது. | நிலுவை வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுட்டத்தின் ஏற்பாடு பிரகாரம் நிலுவை வரி அறவிட வேண்டும். |
| **ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நகரசபைக்கு சொந்தமான 390 வர்த்தக நிலையங்களுக்குரிய 01 தொடக்கம் 12 வருடங்களுக்கான வாடகை நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 46,194,443 ஆனது. | அடையாளம் நிலுவையின் ஒரு பகுதியினை, மீளளிக்க வேண்டிய கேள்வி வைப்பிலிருந்து அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறதுடன் நிலுவை குத்தகைதாரர்களிற்கு இறுதி அறிவித்தல் கடிதங்கள் வழங்கப்பட்டுவருகிறதென. | ஒப்பநதம் பிரகாரம் அறவீடு செய்யப்பட வேண்டும் |
| **(இ) முத்திரைக் கட்டணங்கள்** | | |
| மாகாண சபையின் பிரதிச் செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தரிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் பெறப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 40,873,870 ஆனது. | குறித்த விடயம் தொடர்பாக கடிதங்கள் மூலமும் நேரடியாகவும் காணிப்பதிவாளர் திணைக்களத்தினை மற்றும் மாகாண இறைவரித் திணைக்களத்தினையும் தொடர்பு கொண்டு நிலுவை முத்திரைக் கட்டணங்களை கோரியுள்ள போதிலும் | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| | காலக்கிரமத்தில் அவை எமக்கு கிடைப்பதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நகராட்சி மன்றத்திற்குட்பட்ட இந்து மயானத்தில் தகனக் கிரிகைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற இதுவரை பெறுமதி இனங்காணப்படாதுள்ள 06 எரிவாயுக்கள் (Gas slinder) களவாடப்பட்டிருந்த போதிலும், குறித்த விடயம் தொடர்பாக செயற்பாடு மேற்கொண்டு விசாரணைகள் பூர்த்தி செய்திருக்கவில்லை. | எரிவாயு உருளைகள் களவாடியமை தொடர்பில் நடாத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக் கப்பட்ட விசாரணையினையும் மீளவும் விசாரிக்கும் பொருட்டு விசாரணைக்குழுவானது உதவி உள்ளூராட்சி ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ளது. | விசாரணைகள் உரிய முறையில் நடாத்தப்பட்டு அறிக்கைகள் உரிய தரப்பினருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | நகரசபை எல்லைக்குள் அமையப்பெற்ற ஆயுள்வேத வைத்தியசாலையானது 2022 செப்தெம்பர் மாதத்திலிருந்து மருந்துப் பொருட்கள் இல்லாமையினால் வைத்திய சாலைக்கு வருகை தருகின்ற நோயாளர்கள் எதுவித மருந்துகளும் வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டமையும் குறித்த விடயம் தொடர்பில் பாதீடு செய்யப்பட்ட தொகை முகாமையினால் உரிய முறையில் பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | ஆயுர்வேத வைத்தியசாலையில் 2022 செம்தெம்பர் மாதத்தின் பின்னர் வலிநிவாரண எண்ணை வகைகள் முடிவுற்ற நிலையில் காணப்பட்டது. எனினும் ஏனைய மருந்துகள் நோயாளருக்கு வழங்கும் வகையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. | சீரான முறையில் பொது மக்களுக்கு சேவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| ஆ) | 7.5 சதுர கிலோமீற்றர் பரப்பளவினையுடைய திருகோணமலை நகர சபை எல்லைக்குள் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் அனைத்தும் தரம் பிரிக்கப்படாது கன்னியாவில் உள்ள வனபரிபாலன திணைக்களத்திற்குச் சொந்தமான நிலப்பரப்பில் கொட்டப்பட்டு வருவதுடன் இது தொடர்பில் CGL நிறுவனத்துடன் 2017 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட திண்மக்கழிவு உடன்படிக்கையின் இற்றைவரை அமுல்படுத்தப்பட்டிருக்காததனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. | மேற்குறிப்பிட்ட உடன் படிக்கையிற்கு அமைய நகர சபையினால் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள் அத்தனையும் தரம் பிரிப்பிற்கு உள்ளடக்கப்படாமல் அவ்வாறே CGL International தனியார் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட வேண்டும். | ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | நகரசபைக்குச் சொந்தமான 374 கடைகளில் 80 கடைகள் 2019 ஆம் ஆண்டிலிருந்து வாடகைக்கு வழங்கப் நகர சபையினால் செயற்பட்டிருக்கவில்லை. இதன் கரணமாக சபைக்கு கூட்டுத்தொகை ரூபா 15,199,135 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதென. | கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| ஆ) | ஆதன மீள்மதிப்பீடுகள் 05 வருடத்துக்கொரு முறை மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்ட போதிலும் கடைகளுக்கான மதிப்பீடு 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆதன மீள்மதிப்பீடுகள் தொடர்பில் விலைமதிப்பு திணைக்களத்தின் சேவையை பெற பலதடவைகள் முயன்ற போதிலும் பயனளிக்கவில்லையென. | ஆதன மீள்மதிப்பீடுகள் 05 வருடத்துக்கு ஒரு முறை மேற்கொள்ளப் படல் வேண்டும் |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | **சுவீகரிக்கப்படாத சொத்துக்கள் / உரிமை மாற்றப்படாத சொத்துக்கள்** | | |
| | 51 வாகனங்கள் 03 தொடக்கம் 35 ஆண்டுகள் வரை நகர சபையினால் பயன் படுத்தப்படுகின்ற 51 வாகனங்களின் உரிமை சுவீகரித்திற்கொண்டிருக்கவிலலை. | அந்த வாகனங்களை உடனடியாக உரிமைமாற்றம் செய்யவோ ஏலவிற்பனை செய்யவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது பதிவுப் புத்தகங்களை பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறதென. | நகர சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் |
| ஆ) | **பயன்படுத்தப்படாத / குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்** | | |
| i) | வைத்தியசாலை கழிவுகளை எரியூட்டுவதற்காக பொருத்தப்பட்ட ரூபா 5,695,830 பெறுமதியான இயந்திரம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை பயன்படுத்தப்படாது காணப்படுவதுடன் இயந்திரம் முழுமையான துருப்பிடித்தநிலையில் காணப்படுகின்றது. | திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு இதனை கையளிப்பதற்கு முயன்ற போதும் சந்தையில் இதற்கான உதிரிப்பாகங்கள் இல்லை என தெரிவித்து அதனை கையேற்கவில்லை என. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| ii) | 1997 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட 54 கடைகள் மற்றும் மீன்சந்தைக் கட்டடத்தையும் கொண்டமைந்த நகரசபைக்கு சொந்தமான மலையருவி சந்தைக் கட்டிடத் தொகுதியானது கடந்த 26 வருடங்களாக பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | குறித்த இடத்தினை ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் கல்லூரிக்கு வழங்குதல் தொடர்பில் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதென. | -மேற்படி- |
| iii) | மத்திய சந்தைக் கட்டட கடைத்தொகுதியிலுள்ள 48 கடைகள் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை விளைவற்று | கட்டட அமைப்பினில் காணப்படும் குறைபாடு காரணமாக குத்தகைதாரரினால் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படுகின்றன. | குத்தகைக்கு எடுக்கப்படவில்லை. இவ்விடத்தினை வினைத்திறனாக பயன்படுத்துவது தொடர்பில் முகாமையினால் ஆராயப்பட்டுவருகிறதென. | |
| iv) | நகர சபைக்குரிய 43 வாகனங்கள் 12 வருடங்களுக்கு மேலாக பாவனைக்குட்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்ற போதிலும் குறித்த வாகனங்களை அகற்று வதற்கான அல்லது ஏல விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | குறித்த வாகனங்களை ஏலவிற்பனை செய்வதற்கு உரிய பதிவுப் புத்தகங்கள் இன்மையினால் அவற்றை மோட்டார் பதிவுத் திணைக்களத்தில் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறதென. | குறித்த வாகனங்களை அகற்றுவதற்கான அல்லது ஏல விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும் |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | **ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**<br>ஆரம்ப நிலை மட்டத்தில் 88 பதவி வெற்றிடங்களும், இரண்டாம் நிலை அலுவலகர் மட்டத்தில் 29 பதவி வெற்றிடங்களும், சிரேஸ்ட மட்டத்தில் 02 பதவி வெற்றிடங்களும் உள்ளடங்களாக மொத்த 119 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 26.04.2022 திகதிய சுற்றுநிருபத்தின் படி நிலவும் வெற்றிடங்களிற்கான ஆட்சேர்ப்புக்களை தற்போது மேற்கொள்ளமுடியாது என. | வெற்றிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| ஆ) | **ஊழியர் கடன்**<br>மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான 74 பதவியணியினருக்காக வழங்கப்பட்ட ரூபா 2,239,712 கடன் குறித்த ஊழியர்களிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்திருக்கவில்லை. | இவற்றுள் கணிசமானவை நீண்டகாலமாக காணப்படும் மீதிகளாகும். இவர்கள் தொடர்பான தரவுகள் எவையும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இவை கிடைக்கும் பட்சத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதென. | -மேற்படி- |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பாதிடப்பட்ட செலவுகளிற்கும் உண்மையான செலவினத்திற்குமிடையே 14 சதவீதம் முதல் 394 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் நிலவியதால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப் பட்டிருக்காமை அவதானிக்கப் பட்டுள்ளது. | விலைகள் பன்மடங்கு அதிகரித்தமை மின்சாரம், நீர்பாவனை, கணக்காய்வுக் கட்டணம், சட்ட ஆலோசனை கொடுப்பனவு மற்றும் தொலைத் தொடர்பு நிலுவை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை. கொடுத்த கழிவு (வீதவரி) மற்றும் கொடுத்த தரகு (முத்திரைக்கட்டணம்) என்பன அதிகரித்தமை இதற்கு காரணமானதென. | அதிக வீதத்தில் முரண்கள் தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |